# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.247/2023</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

விபத்து சம்மந்தமாக என்மீது முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு எடுத்து சென்றேன். எனக்கு எதிராக திருவையாறு நீதித்துறை நடுவர் மன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நிருவாகத்தில் என்மீது என்ன நடிவக்கை எடுக்கப்பட்டது என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற அரசு பேருந்து மோட்டார் சைக்கிளின் மீது மோதி நான் தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றும், விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல.

நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.